மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஔ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அமைச்சரவையின் குறிப்பிட்ட ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 72(2)-ன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானம். பேரவை விதி 72(2)-ன்படி கீழ்க்காணும் தீர்மானம் வரப்பெற்றுள்ளது:

"பொது வினியோக முறையில் 10 கிலோவுக்கும் மேலாக வழங்கப்படும் அரிசியின் விலையை ரூ. 3.50 லிருந்து ரூ. 6.00 ஆக உயர்த்திய இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது" என்று திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், ஜே. ஹேமச்சந்திரன், ஜி. பழனிசாமி, இ. புகழேந்தி, ஜி.கே. மணி மற்றும் ஐ. கணேசன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். தீர்மானங்கள் முறைப்படி உள்ளன. எனவே, பேரவை விதி 72(2)-ன்படி தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இடங்களில் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(எதிர்க்கட்சியைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து நின்றனர்.)

பேரவை விதி 72(2)-ன்படி தேவையான உறுப்பினர்கள் எழுந்து நிற்பதால் இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதியளிக்கிறது என்று நான் அறிவிக்கிறேன். இத்தீர்மானம் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதால், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களைத் தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.